**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Calender | : | | Miscellaneous | : | |
| Preliminary Register | : | | Case No. | : | **S.C.30/2023** |
| Sessions | : | | | | |
| | | | Prosecution | : | **P.W.6** |
| Deposition of witness for : | | | Defence | : | **D.W.** |
| | | | Court | : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | செல்லதுரை | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **25.10.2025**

**1 முதல் 5 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் நொச்சிக்குளத்தில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனக்கு வழக்கு சம்பவம் தெரியாது. கடந்த 7, 8 வருடங்களாக எனக்கு உடல்நிலை சரியில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

எங்கள் ஊரை சேர்ந்த லட்சுமணன் மகன் அப்பாதுரைக்கும், 1 வது எதிரிக்கும் இடையே நிலம் சம்மந்தமான பிரச்சனை உள்ளதா என்று எனக்கு தெரியாது. அந்த நிலம் சம்மந்தமாக பெரம்பலூர் நீதிமன்றத்தில் சிவில் வழக்கு நடப்பதாக போலிசார் விசாரணையில் நான் சொன்னேன் என்றால் சரியல்ல. 23.12.2015ம் தேதி 11.30 மணிக்கு நான், என்நண்பர் செல்லபாப்பு, சக்திவேல் ஆகியோர் தண்ணீர்பாய்ச்ச சென்றபோது சத்தம்கேட்டு பார்த்தபோது ஆஜர் எதிரிகள்

அங்கிருந்த கம்பி வேலிகளை பிடிங்கி தகராறு செய்ததாக போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. நாங்கள் நமக்கு எதற்கு வம்பு என்று அங்கிருந்து கிளம்பி சென்றுவிட்டோம் என்று போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. மறுநாள் 24.12.2015 அப்பாதுரையிடம் ஆறுமகம் என்பவர் அவருடைய வீட்டிற்குபோய் உன்னால் மயிரகூட புடுங்க முடியாது என்றும்,ராத்திரி நீ கொள்ளைக்கு வந்திருந்தால் உன்னை கொலைசெய்திருப்பேன் என்று கத்தியை காட்டி மிரட்டிவிட்டு சென்றதாக போலிசாா விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. அதற்கு அப்பாதுரை காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு சென்றார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் என்னுடைய ஊர்க்காரர்கள். அவர்கள் நல்லபழக்கமானவர்கள். நான் போலிசார் விசாரணையில் உண்மை விவரங்களை கூறிவிட்டு, தற்போது எதிரிகள் என்னுடைய ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களை காப்பாற்றவேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

இல்லை.

<u>மறுவிசாரணை</u>: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.